


# நூற்றாண்டு காணும் தாம்பரத்தின் ஜோதி

செப்டம்பர்
04
2025



## பேரறிஞர் அண்ணா

"பெரியார் நகர் பெயர் பலகை திறக்கும் காலத்தில் நான் தாம்பரம் நகருக்கு வந்திருக்கிறேன். (1940 களில்). அன்று சிற்றூராக காட்சியளித்த தாம்பரம் இன்று பெரிய நகரமாக மாறியபின் தம்பி முனுஆதி தலைமையில் நடத்தப்படும் பஞ்சாயத்து ஆட்சிக் காலத்தில் நகருக்கு வரும் போது ஏற்றமிகு திட்டங்கள் பல தீட்டி எப்படியெல்லாம் தாம்பரம் வளர்ச்சிக்கு பாடுபட்டு வருகிறான் என்பதை அறியும் போது மனதில் எத்தனையோ எண்ணக் குவியல்கள் என் சிந்தனையை கிளறிய வண்ணமிருக்கின்றன.

(தாம்பரம் பொதுக்கூட்டத்தில் பேரறிஞர் அண்ணா 1964)
(தாம்பரம் நகராட்சி மலரில் இருந்து – 1970)



## மக்கள் திலகம் எம்.ஜி.ஆர்.

"நான் தி.மு.க.வில் இருந்தாலும், சினிமாவில் கவனம் செலுத்தி வந்த என்னை கட்டாயப்படுத்தி பரங்கிமலை தொகுதியில் நிற்க வைத்தவர் முனுஆதி. அதற்கு அண்ணாவிடம் அனுமதி கேட்க, அண்ணா அவர்களோ எம்.ஜி.ஆர். தமிழகம் முழுவதும் பிரச்சாரம் செய்ய வேண்டும். முனுஆதி நீ பொறுப்பேற்றுக் கொள்கிறாயா என்று அண்ணா கேட்க, தான் பொறுப்பேற்பதாக சொல்லி அவர் நின்ற திருப்போரூர் தொகுதியை விட நான் நின்ற பரங்கிமலை தொகுதியில் வேலை செய்து அவரும் வென்று என்னையும் வெற்றி பெற வைத்தவர் முனுஆதி. இன்று முதலமைச்சராக இருக்கிறேன் என்றால் அதற்கு காரணம் நண்பர் முனுஆதி"



## தளபதி மு.க.ஸ்டாலின்


"தாம்பரம் ஊராட்சி மன்ற வார்டு உறுப்பினர், ஊராட்சி மன்ற தலைவர், பேரூராட்சி தலைவர், முதல் நகரமன்றத் தலைவர், 4 முறை சட்டமன்ற உறுப்பினர், பின் சட்டப்பேரவை தலைவர் என்று பல நிலைகளில் உயர்வு பெற்றவர். திரு. முனுஆதி. தாம்பரம் பகுதியின் முன்னேற்றத்திற்கு அரும்பாடுபட்டவர். எளிமை, பாகுபாடின்றி பழகும் முறை அனைவரையும் அரவணைக்கும் பண்பால் உயர்ந்தவர் "

(முனுஆதி அவர்களின் 90வது பிறந்தநாள் மலர் வெளியிட்டு வாழ்த்திய போது)



## ஆசிரியர் கி.வீரமணி

முனுஆதி சட்டமன்ற உறுப்பினராக இருந்த போது முதலமைச்சர் அண்ணாவிடம் நம்மை ஆளாக்கிய பெரியாருக்கு என்ன செய்ய போகிறோம் என்று கேட்க, அதற்கு பேரறிஞர் அண்ண அவர்கள் இந்த ஆட்சியே பெரியாருக்கு காணிக்கை தான் என்று வரலாற்று சிறப்புமிக்க பிரகடனத்தை சொன்னார். அந்தப் பெருமைக்கு காரணமாய் இருந்தவர் மானமிகு முனுஆதி.



தோற்றம் :
04.09.1926

நூற்றாண்டு
04.09.2025

### தமிழ்நாடு சட்டப்பேரவை முன்னாள் தலைவர்

### (நினைவில் வாழும்)

# முனு ஆதி

### அவர்களை
### வாழ்த்தி வணங்குகிறோம்...

**சட்டமன்ற உறுப்பினராக காமராஜர், பக்தவத்சலம், பேரறிஞர் அண்ணா, டாக்டர் கலைஞர். மக்கள் திலகம் எம்.ஜி.ஆர். ஆகிய ஐந்து முதல்வர்களை கண்டவர்**

**1949 முதல் ஊராட்சி மன்ற உறுப்பினர், ஊராட்சி மன்ற துணைத் தலைவர், பேரூராட்சித் தலைவர், முதல் நகரமன்ற தலைவர், 4 முறை சட்டமன்ற உறுப்பினர் சட்டமன்ற சபாநாயகர் என்று பல்வேறு பொறுப்புகளை வகித்து தாம்பரத்தின் வளர்ச்சிக்கு வித்திட்டவர்.**

**மத வழிபாட்டுத்தலங்கள், பள்ளிக்கூடங்கள், பல குடியிருப்புகளை உருவாக்கியவர்,**

**பாலாற்றுக் குடிநீரை தாம்பரத்திற்கு கொண்டு வந்தவர்**

**தாம்பரம் மற்றும் ஆலந்தூர் நகராட்சிகளை உருவாக்கியவர்**

**1962 - சைதாப்பேட்டை 1971 - திருப்போரூர்**
**1967 - திருப்போரூர் 1977 - தாம்பரம்**
**என்று 4 முறை சட்டமன்ற உறுப்பினராக இருந்தவர்**

**அய்யா அவர்களின் புகழ் ஓங்குக**



## டாக்டர் கலைஞர்

திரு. முனுஆதி அவர்கள் தாம்பரம் பகுதியில் திராவிட இயக்த்தை வளர்க்க பாடுபட்டவர். அவர் தி.மு.க.வில் இருந்தபோதும் சரி, விலகி இருந்த காலகட்டத்திலும் சரி, என் மீது தனிப்பட்ட முறையில் அன்பும் பாசமும் கொண்டவர்.

(முனுஆதி அவர்களின் 90வது பிறந்தநாள் மலர் வாழ்த்து செய்தியில்)



## பேராசிரியர் க.அன்பழகன்

"பேரறிஞர் அண்ணா அவர்களின் தலைமையில் கழகத்தில் இணைந்தது முதல் என்னோடு அன்பு பாராட்டி வந்தவர் முனு ஆதி அவர்கள். பின் கழகம் பிளவுபட்டு அவர் எம்.ஜி.ஆர். தலைமையில் சபாநாயகராக இருந்தபோதும், எதிர்க்கட்சியாக நாங்கள் இருந்தாலும் கலைஞர் மீதும், என் மீதும் மாறா அன்பு பாராட்டி வந்தவர்"

(முனுஆதி அவர்களின் பவள விழாவில் பங்கேற்று வாழ்த்தியபோது)



## தோழர் ஆர்.நல்லக்கண்ணு

"மறைந்த கம்யூனிஸ்ட் தலைவர் ஜீவா அவர்களுக்கும் திரு. முனுஆதி அவர்களும் மிக நெருக்கமாக பழகியவர்கள் என்பதை நான் அறிவேன். மாற்றுக் கட்சியில் நாங்கள் இருந்தாலும் என் மீது அவர் காட்டிய அன்பு என்னை வியப்பில் ஆழ்த்தியது. ஒரு முறை விவசாயிகளின் பிரச்சினையை தீர்ப்பதற்காக எம்.ஜி.ஆர். அவர்கள் முனுஆதி தலைமையில் ஒரு உயர் மட்டக்குழு அமைத்தார். அதில் நானும் உறுப்பினராக இருந்து பாணியாற்றியதை நினைத்துப் பார்க்கிறேன். அதிகார தோரணையில்லாமல் எல்லோருடனும் பழகும் பண்பு கொண்டவர் முனுஆதி."

(முனுஆதி அவர்களின் பிறந்தநாள் வாழ்த்து மலரில்)



## துரைமுருகன்

இளம் பேச்சாளர்களை, தலைவர்களை வளர்த்து விடுவதில் முனுஆதிக்கு, நிகர் அவர் தான். நான் மாணவனாய் இருந்த காலத்தில் எப்படி என்னை மேடையேற்றி அழகு பார்ததாரோ அதே போல சட்டமன்ற உறுப்பினராக இருந்த எனக்கு எதிர்க்கட்சியாக இருந்தாலும் பேசுவதற்கு நிறைய வாய்ப்பு அளித்தவர் அண்ணன் முனுஆதி. சபாநாயகர் நினைத்தால் ஒருவரை ஜுரோவாகவும் ஆக்கலாம். ஹீரோவாகவும் ஆக்கலாம். என்னை ஹீரோவாக ஆக்கியவர் திரு. முனுஆதி அண்ணன் அவர்கள்

# நூற்றாண்டு விழா குழுவினர்

Janavil 98409 80094